முருகப்பெருமான் துணை

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 653**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**மகான் முருகப்பெருமான் தலைமையில் ஞானிகள் ஆட்சி வரவுள்ளது**

13.07.2021, செவ்வாய்கிழமை

1. ஞானச்சுடரே அரங்கா போற்றி
ஞானபண்டிதன் எந்தன் துணைகொண்ட தேசிகா போற்றி
ஞானமுடன் சுப்ரமணியர் யானும் இனிதே
நாட்டிடுவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
2. ஆசியதும் அரங்கன் தொண்டர் படைமூலம்
அகிலம் உலகமாற்றம் பெற இருக்க
வாசிவென்ற ஞானியர்கள் படைகளெல்லாம் வலம்வந்து அரங்கன் தர்மத்தை காத்து
காத்து அரங்கன் தொண்டர்களோடு கலந்து கருணைபட உலகில் அற்புதம் நிகழ்த்த இருக்க
3. இருக்கவே அரங்கனை தொடர்ந்து
இந்த உலகில் தொண்டு செய்து வரும் மக்களெல்லாம்
கருத்தாக ஆறுமுகன் என்னாசியோடு
கருணைநிரம்பிய இந்த கலியுகத்தில்
4. கலியுகத்தில் ஞானவான்களாக சிறந்து
கடைத்தேற்றம் எந்தன் அருளால் அடைவர்
அழியாமை பெற்று சிறப்பதோடு
அரங்கன் தர்மத்தின் பலத்தாலே
5. பலத்தாலே பாருலக மாந்தர்களெல்லாம்
பாடிடுவேன் பரிபக்குவ நிலைகள் கூடி
தயவான அரங்கன் தலைமை கொண்டு
தரணியில் ஞான ஆட்சி உருவாக்குவர்
6. ஆக்கவே தர்மத்தின் காவலன் அரங்கன்
அறமும் அன்னதான உயர் சேவைகளும்
யுகத்தையே மாற்றி உண்மை ஞான வழியில்
ஓங்கார ஓசைபட ஞானயுகமாக பெருமாற்றம் காணும்
7. காணவே அரங்கன் சக்திக்குள்ளே
கந்தவேலன் யான் நீக்கமற இருக்க
ஞானதீட்சை பெறும் மக்களுக்கெல்லாம்
ஞானபண்டிதன் என் ஆசியும் தயவும் உண்டுஉண்டு
8. உண்டுஉண்டு அரங்கனை தொடரதொடர
உலகமெங்கும் தொண்டு பலம் பெருகி இனிதே
கண்டுகண்டு அரங்கன் வழி வருவதாலே
கலியுகம் மீண்டு ஞானயுகமாக மாற்றம் பெறும்

9. மாற்றம் தரவல்ல தவசியே
மக்களை காக்க வல்ல ஞானியே
ஆற்றல்பட அரங்கனே இந்த கலியில்
அறிவிப்பேன் இந்த சூட்சுமம் உணர்ந்து மக்கள் வருகவருக

10. வருகவே வையகம் மாறும்
வருகவே இந்த கலியுகம்தானும்
முருகப்பெருமான் என் ஆளுமைக்குவந்து
முழுமையான ஞான ஆட்சிக்காலமாக மாறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–